முதல்வர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி அவர்களின்
செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்.மரு.சி.ரேவதி, எம்.டி.,
முதல்வர்

ந.க.எண்.12795/நி2/1/2023 நாள் 20.09.2024

பொருள்: நிருவாகம் – திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய CCSE தொகுதி IV நேரடி தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு மருத்துவத் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி – திருநெல்வேலியில் பணியமர்த்தப்பட்டவர்கள் பணிவரன் முறை செய்து ஆணைகள் வழங்குவது – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செயலாளர் அவர்களின் கடித எண்.1960/PSD-D2/2023, நாள்:02.09.2023.
2. சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, இயக்குநரக கடித எண்.56867/E2/2/2023, நாள்:21.09.2023 & 07.10.2023.
3. சென்னை, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கக கடிதஎண். 93355/நி2/5/2023, நாள் : 22.09.2023 & 13.10.2023.
4. இவ்வலுவலக பணி நியமன ஆணை எண்.12795/நி2/1/2023, நாள். 22.09.2023 & 17.10.2023.

*******

**ஆணை**

பார்வை 1-இல் கண்டுள்ள கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய CCSE தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மருத்துவ துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-2 மற்றும் 3 -ல் கண்டுள்ள ஆணைகளின்படி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பார்வை 4-ல் கண்டுள்ள இவ்வலுவலக பணி நியமன ஆணைகளின்படி, இளநிலை உதவியாளர்களாக பணியில் இணைந்த கீழ்கண்ட இளநிலை உதவியாளர்கள் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்ட தேதிகளில் இக்கல்லூரியில் பணியில் இணைந்துள்ளனர்.

| வ.எண் | TNPSC வ.எண். | இளநிலை உதவியாளர்களின் பெயர் | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 45 | செல்வன்.S.புருஷோத்தமன் | 29.09.2023 முப | 29.09.2023 முப |
| 2 | 82 | திருமதி. M.பவித்ரா | 20.10.2023 முப | 20.10.2023 முப |
| 3 | 83 | திருமதி. M.கிருபாலட்சுமி | 20.10.2023 முப | 20.10.2023 முப |

மேற்கண்ட இளநிலை உதவியாளர்களின் கல்வி தகுதி 10-ம் வகுப்பு தேர்ச்சி என்பதால் இப்பத்தாம் வகுப்பு பள்ளி சான்றிதழ்கள் மெய்தன்மை வாய்ந்தது என்ற அறிக்கை மற்றும் தமிழ் வழியில் பயின்றோருக்கான ஒதுக்கீட்டின் மூலம் பணிநியமனம் பெற்றுள்ளவர்களின் தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழின் (PSTM) உண்மைத் தன்மை அறிக்கை பெறப்பட்டு பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை இக்கல்லூரியில் பணியில் இணைந்த நாள் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**" The Regularization in subject to the outcome of the writ petitions pending on the files of the honorable high court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the Post included in combined Civil Services Examination-IV (Group-IV).**

மேற்படி, பணிவரன் முறை செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டு கால அவகாசத்தில் தொடர்ச்சியான 2 ஆண்டு காலம் பணிபுரிந்து தகுதிகாண் பருவகாலத்தை திருப்திகரமாக முடித்திட வேண்டுமெனஅறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், பணியில் சேர்ந்த இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பு தேர்வு மேலும், அதனோடு இணைந்த துறைத் தேர்வுகள் தேர்ச்சி மற்றும் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

முதல்வர்

19/9/24

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர்கள்

நகல்: பணிப்பதிவேடு / கோப்பு

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :**

1. மருத்துவக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை-10.
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை-06.